செ.வெ.எண்: 12 நாள்: 06.02.2018

# பத்திரிக்கை செய்தி

**மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லம் அமைக்க தொண்டு நிறுவனத்திடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.**

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதில் மனநலம் பாதிக்கப்பட்டவருக்கான மறுவாழ்வு இல்லத்தினை தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து, மாவட்டம் தோறும் அமைக்கு திட்டம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் அன்னவாசல் அரசு மருத்துவமனை வளாகத்தில் வேர்டு தொண்டு நிறுவனத்தால் ஏற்கனவே ஒரு மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது அரசால் புதுக்கோட்டை மாவட்டத்தில் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்காக மேலும் ஒரு மறுவாழ்வு இல்லம் தொண்டு நிறுவனம் மூலம் அமைக்கப்பட உள்ளது. இவ்வில்லம் அமைக்க முன்வரும் தொண்டு நிறுவனம், மனநல சட்டம் 2002 இல் தெரிவித்துள்ளவாறு தொண்டு நிறுவனத்தில் போதுமான இட வசதி, படுக்கை வசதி, கட்டிட வசதி மற்றும் அடிப்படை வசதிகளுடன் கூடிய பாதுகாப்பான கட்டிடம் உடைய தொண்டு நிறுவனமாக இருத்தல் வேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்தில் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மேற்காணும் வசதிகளுடன் மறுவாழ்வு இல்லம் அமைக்க விரும்பும் தொண்டு நிறுவனங்கள் 07.02.2018-க்குள் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், புதக்கோட்டை, புதிய பேருந்து நிலையம் அருகில் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் விபரங்கள் அறிய 04322 223678 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**